

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.01.2026) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 108 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11 திருக்கோயில்களில் 18 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டடம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, 15 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் 7 திருக்கோயில்களில் 10 முடிவுற்ற திருப்பணிகள் மற்றும் 6 சரக ஆய்வாளர் அலுவலகங்களை திறந்து வைத்து. சிற்றுந்துகளின் பயன்பாட்டினை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் ஆர். காந்தி, பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் தா.முருகானந்தம் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத் தலைவர் பொன் குமார் ஆங்கிலப் புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (3.1.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இணை மற்றும் துணை மருத்துவ கவுன்சில் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ஹம்சராஜ் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அக்கவுன்சிலின் செயலாளர் டாக்டர் தேசிகாமணி உள்ளார்.

### தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்: நம்பி வாக்களித்த மக்களுக்கு

# கழக அரசு எப்போதுமே உண்மையாக இருக்கும் என மீண்டுமொருமுறை நிரூபித்துள்ளோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜன.4-

தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் இருபதாண்டுகாலக் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்களை வழங்கக்கூடிய புதிய திட்டமான "தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைச் (Tamil Nadu Assured Pension Scheme - TAPS)" செயல்படுத்திட ஆணையிட்டது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்: 20 ஆண்டுகாலக் கோரிக்கையை நிறைவேற்றிய திராவிட மாடல் அரசு!**

**நம்பி வாக்களித்த மக்களுக்கு, கழக அரசு எப்போதுமே உண்மையாக இருக்கும் என மீண்டுமொருமுறை செய்து காட்டியுள்ளோம்! அரசு ஊழியர்களுக்கு மிகப் பெரும் புத்தாண்டு, பொங்கல் பரிசாக TAPS அறிவிப்பினை வெளியிட்டுள்ளோம்.**

**திராவிட மாடல் நல்லாட்சிதான் தொடரும்! தலைநிமிர்ந்து வரும் தமிழ்நாட்டின் நிதிநிலை சீரடையச் சீரடைய அனைத்துத் தரப்பினரின் கோரிக்கைகளும் நீங்கள் கேட்காமலே நிறைவேறும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி"

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை, ஜன.4-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின்படி இன்று (04.01.2026 - ஞாயிற்றுக்கிழமை) சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம்.

**கொளத்தூர் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 68 , பாகம்: 121. இடம்: 24/A98, வெங்கடேசன் சாலை, பெரியார் நகர், சென்னை82.

மாலை: 4.30 மணி: வட்டம் 68 , பாகம்: 111. இடம்: எண்.10/33, எஸ்.ஆர்.பி. காலனி, 7வது தெரு, பெரவள்ளூர், சென்னை82.

மாலை: 5.00 மணி: வட்டம் 68 , பாகம்: 110. இடம்: எண்.43/A2, எஸ்.ஆர்.பிகாலனி 7வது தெரு, பெரவள்ளூர், சென்னை82.

மாலை: 5.30 மணி: வட்டம் 68, பாகம்: 123. இடம்: எண்.32, 18ல் 2வது குறுக்கு தெ, பெரியார் நகர், சென்னை82.

மாலை: 6.00 மணி: வட்டம் 68 , பாகம்: 124, இடம். எண். C199, 19வது தெரு, பெரியார் நகர், சென்னை82.

**கொளத்தூர் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 65 , பாகம் 79, இடம்: சோமநாதபுரம் 2வது தெரு, கொளத்தூர், சென்னை99.

மாலை: 4.30 மணி: வட்டம் 65 , பாகம் 54, இடம்: சாந்தி நகர், 4வது குறுக்கு தெரு, கொளத்தூர், சென்னை99.

மாலை: 5.00 மணி: வட்டம் 65அ , பாகம் 43, இடம்: காமராஜ் நகர், பூங்கா அருகில், கொளத்தூர் 99.

மாலை: 5.30 மணி: வட்டம் 65அ , பாகம் 24, இடம்: முருகன் நகர் 2வது தெரு, கொளத்தூர்.

மாலை: 6.00 மணி: வட்டம் 69அ , பாகம் 238 இடம்: ரங்கசாமி தெரு, செம்பியம்11.

மாலை: 6.30 மணி: வட்டம் 69அ , பாகம் 236, இடம்: கோவர்த்தன் தாஸ் தெரு, செம்பியம், சென்னை11.

**துறைமுகம் கிழக்கு பகுதி**

காலை: 9.00 மணி: வட்டம் 56அ , பாகம் 86, 87, 88, 89, இடம்: எண்.23, பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை1.

**துறைமுகம் மேற்கு பகுதி**

காலை: 9.00 மணி: வட்டம் 57அ , பாகம்: 121, 127, 128, 129, 130, 131, 132, 133. இடம்: ஸ்ரீ வாசவி மினி ஹால், மணி கண்டன் தெரு, சென்னை1.

காலை: 10.00 மணி: வட்டம் 54அ , பாகம்: 31, 32, 33, 34, 35, 36, 37. இடம்: திருப்பள்ளி தெரு, சென்னை.

**எழும்பூர் வடக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 99 , பாகம் 122, 123, 124, 125

**எழும்பூர் தெற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 108அ , பாகம் 133, 143, 144. இடம்: கடுகாத்தம்மன் கோயில் தெரு, சேத்துப்பட்டு.

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி**

மாலை: 5.00 மணி: வட்டம் 97 , பாகம் 168, 169 , இடம்: வெள்ளாள தெரு 4வது சந்து, சிவலிங்கம் தெரு, வெள்ளாள தெரு 1 முதல் 120 வரை

மாலை: 6.00 மணி: வட்டம் 96 , பாகம் 152, 153 , இடம்: யுனைட்டெட் இந்திய நகர் பிரதான சாலை, A.பிளாக் LIC அலுவலர் குடியிருப்பு, யுனைட் இந்தியா நகர், யுனைடெட் இந்தியா நகர் சந்து குறுக்கு தெரு, மார்க்கெட் பாரதிநகர்.

**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

மாலை: 5.00 மணி: வட்டம் 104ஆ , பாகம் 95, 122 , இடம்: முல்லை நகர், 6வது தெரு, உதயம் காலனி

மாலை: 6.00 மணி: வட்டம் 94 , பாகம் 60,69 , இடம்: சிட்கோ நகர் 57வது தெரு, 10வது பிளாக், 92வது தெரு.

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர், மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

### தஞ்சையில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்

# டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு" ஆலோசனைக் கூட்டம்!

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு – அமைச்சர் பெருமக்கள் பங்கேற்பு!

தஞ்சாவூர் ஜன.04.

தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேருமுன்னிலையில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமையில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு வருகிற 19.01.2026 திங்கட்கிழமை அன்று நடைபெற உள்ளதை முன்னிட்டு கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தலைமையில் தஞ்சையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

நேற்று தஞ்சை புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள மஹாராஜா மஹாலில் ஜனவரி 19ஆம் தேதி தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டியில் நடைபெற உள்ள வெல்லும் தமிழ்ப் பெண்கள் டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு முன்னேற் பாடுகள் தொடர்பாக டெல்டா மண்டல நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர்கள் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், எஸ்.ரகுபதி, முனைவர் கோவி. செழியன், சி.வி.கணேசன், சி.வ.வீ.மெய்யநாதன், எஸ். எஸ்.சிவசங்கர், மாநில அணி துணைச் செயலாளர் கவிஞர் சல்மா எம்.பி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், அமைச்சருமான கே.என்.நேரு தலைமை வகித்து ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது -

சுமார் 1.25 லட்சம் மகளிர் அணியினர் பங்கேற்கும் இந்த பிரம்மாண்ட மாநாட்டை சீரும், சிறப்புமாக ஒருங்கிணைந்து, மாநாட்டில் பங்கேற்கும் அனைவரின் அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகளை உறுதி செய்து, டெல்டா மண்டலத்தில் நம் கழகத்தின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் இந்த மாநாடு சிறப்பாக அமைய வேண்டும், இதற்காக மாவட்டச் செயலாளர்கள் இப்போதே அந்த பணிகளை தொடங்கி பொங்கல் திருநாளுக்குள் முடித்திட வேண்டும், அனைவரும் தீவிரமாக பணியாற்ற வேண்டும் இவ்வாறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றி னார்.

தமிழ்நாடு அரசின் டெல்லி பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், மாவட்டக் கழகச் செயலாளர்கள் பொறுப்பாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, பூண்டி கே.கலைவாணன், காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ, க.வைரமணி, வீ. ஜெகதீசன், நிவேதா முருகன் எம்.எல்.ஏ, கே.கே.செல்லபாண்டியன், என்.கௌதமன், தி.பழநிவேல், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ச.முரசொலி, அருன் நேரு , தாட்கோ தலைவர் ந.இளையராஜா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மகளிர் மற்றும் மகளிர் தொண்டரணி மாவட்ட அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

### மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் நடத்துகின்ற

# 'சான்றோர் பெருவிழா: இலக்கிய விழா நிகழ்ச்சி!

## தமிழ் ஆர்வலர்களுக்கு முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா அழைப்பு!



சென்னை, ஜன.4-

மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் நடத்துகின்ற 'சான்றோர் பெருவிழா' எனும் இலக்கிய விழா நிகழ்ச்சி ஜனவரித் திங்கள் 5, 6 ஆகிய இரண்டு நாள்கள் முற்பகல் 10.00 மணிக்கு உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்டவளாகத் திருவள்ளுவர் கலை அரங்கில் நடைபெறவுள்ளன என்று உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநரும், துணைத் தலைவருமான முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா அறிவித்துள்ளார்.

முதல் நாள் நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையுரை ஆற்றவுள்ளார். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பலஅடிகளார் அவர்கள் சான்றோர் உரையாற்றிச் சிறப்பிக்கவுள்ளார்.

மதுரை மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன்குமார் தொடக்கவுரை ஆற்றவுள்ளார். இந்நிகழ்ச்சிக்கு உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் மற்றும் துணைத்தலைவர் முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா அவர்கள் வரவேற்புரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் முற்பகல் 11.30 மணிக்கு 'இன்றைய வாழ்க்கை பூந்தோட்டமா? போராட்டமா?' என்ற தலைப்பில் சொல்வேந்தர் சுகிசிவம் அவர்கள் தலைமையில் பட்டிமண்டபம் நடைபெறவுள்ளது. பூந்தோட்டமே என்ற தலைப்பில் கவிஞர் அபுதாபி பாஸ்கர், நகைச்சுவை நாவலர் க.சிவகுருநாதன், முனைவர் சா.நீலகண்டன் ஆகியோரும் போராட்டமே என்ற தலைப்பில் முனைவர் சிவ.சதீஸ்குமார், சிந்தனைச் செல்வர் தாமல் சரவணன், இசைக்குயில் திருமதி மலர்விழி ஆகியோர் வாதிடவுள்ளனர்.

இதனையடுத்து பிற்பகல் 2.00 மணிக்கு தமிழர் வாழ்வும் தமிழ்ப் பணிகளும் என்ற தலைப்பில் 'சான்றோர் முற்றம்' என்ற நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சிக்குத் தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநர் முனைவர் ஔவை.ந.அருள் அவர்கள் தலைமையேற்க சங்க இலக்கியம் காட்டும் தமிழர் பண்பாடு என்ற தலைப்பில் முனைவர் சரஸ்வதி ராமநாதன் அவர்களும் சித்தர்களின் வாழ்வும் தமிழ்ப் பணிகளும் என்ற தலைப்பில் முனைவர் மோசஸ் மைக்கேல் பாரடே அவர்களும் உரையாற்றிச் சிறப்பிக்கவுள்ளனர்.

பிற்பகல் 3.30 மணிக்கு இயல், இசை. நாடகமன்றத்தின் சார்பில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. பிற்பகல் 6.00 மணிக்கு 'தமிழ் ஓசை' என்ற தலைப்பில் திரைப்பட இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தன் தலைமையிலான குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இரவு 7.30 மணிக்கு கலைமாமணி எம்.பி.விஸ்வநாதன் குழுவினரின் 'மதுரைவீரன்' நாடகம் நடைபெறவுள்ளது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் 'தமிழ்ச் சங்கங்களின் சவால்களும் தீர்வுகளும்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. கருத்தரங்க அமர்வில் அமெரிக்காவின் பாரதி கலைமன்றத்தின் தலைவர் கணேஷ் ரகு அவர்கள் தலைமையேற்க அவரின் கீழ் ஹாங்காங் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் முனைவர் மெய்.சித்ரா அவர்களும் கரூர் உலகத் தமிழ்க்காப்புக் கூட்டியக்கத்தின் தலைவர் முனைவர் சி.சுப்பிரமணியன் அவர்களும் கர்நாடகம் அனைத்திந்தியத் தமிழ்ச் சங்கப் பேரவையின் தலைவர் செ.துரைசாமி அவர்களும் கேரளா திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மு.முத்துராமன் அவர்களும் மதுரை புரட்சிப் பாவலர் மன்றத்தின் தலைவர் பி.வரதராஜன் அவர்களும் உரையாற்றிச் சிறப்பிக்கவுள்ளனர்.

நிறைவு விழா நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் சிறப்புரையாற்றவுள்ளார். தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கப் பாண்டியன் அவர்கள் நிறைவுப் பேருரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்ச்சிக்கு அயலகத் தமிழ் அமைப்புகள், வெளி மாநிலத் தமிழ் அமைப்புகள்ää தமிழகத் தமிழ் அமைப்புகள், உள்ளூர்த் தமிழ் அமைப்புகள் உள்ளிட்ட 60க்கும் மேற்பட்ட அமைப்புகளிலிருந்து சான்றோர் பெருமக்கள்; கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

எனவே இந்நிகழ்ச்சியில் மதுரையைச் சார்ந்த தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநரும் துணைத்தலைவருமான முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா அவர்கள் கேட்டுக்கொண்டார்.

### சென்னை தெற்கு மாவட்ட

# நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பி.நரேஷ்குமாரின் புதிய அலுவலகம்!

## எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. – வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி. திறந்து வைத்தனர்!

சென்னை, ஜன.4-

சைதை மேற்கு 139வது வட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட நெசவாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பி.நரேஷ்குமார் ஏற்பாட்டில் புதிய அலுவலகத்தை பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., திறந்து வைத்து கழக நிர்வாகிகளுக்கு பரிசு பொருட்களை வழங்கினார்கள்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி 139வது வட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட நெசவாளர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர் பி.நரேஷ்குமார் ஏற்பாட்டில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நல்வாழ்த்துக்களுடன் மேற்கு சைதாப்பேட்டை, கெங்கையம்மன் கோயில் தெருவில் 02.01.2026 (வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினரும், 140வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், ஆகியோர் புதிய அலுவலகத்தை திறந்துவைத்து கழக நிர்வாகிகளுக்கு பரிசு பொருட்களை வழங்கினார்கள்.

மேலும் இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன், பகுதி துணை செயலாளர் த.சம்பத், பகுதி பொருளாளர் வி.பி.ஜானகிராமன், வட்டகழக செயலாளர்கள் சை.மு.சேகர், அட்கோகமலநாதன், மாவட்ட பிரதிநிதி ஜி.கே.ராமச்சந்திரன், பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம் க.பிரபு, இரா.சத்யா, பா.அருண், வட்ட கழக நிர்வாகிகள் பூபதி வெங்கடேசன், கொடி சுரேஷ், மு.காளியப்பன், நியூகாலனி சம்பத், யமாகா ராஜேஷ், வி.சபரி, அருண் கண்ணதாசன், விஎம்கே.சரத்குமார், சார்பு சரவணன், சாரதிநகர் சரவணன், பொறியாளர் அணி தினேஷ்,

வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் ம.திலீப், எஸ். பி.தீனா, ஜி.வெற்றிவேல், பட்டாபி, விக்கி, வ.ராஜா, வழக்கறிஞர் நரேஷ், சசிகுமார், லோகா, அமின், மணி, ஜானி, அப்பு, சஞ்சய், ஞானவேல், ஆர்.விக்கி, சாலமோன், கே.திவாகர், ஆகாஷ், எம். கார்த்திக், நசீர், நதீன், வினோத் துளசிங்கம், மணி, தினேஷ், சஞ்சய், கார்த்திக், விக்னேஷ், சுபாஷ் உள்ளிட்ட பாக பொறுப்பாளர்கள், பாக களப் பணியாளர், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள், பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.



ஜனவரி 19ஆம் தேதி தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டியில் நடைபெற உள்ள வெல்லும் தமிழ்ப் பெண்கள் டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு முன்னேற்பாடுகள் தொடர்பாக டெல்டா மண்டல நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், அமைச்சருமான கே.என்.நேரு சிறப்புரையாற்றினார். உடன் அமைச்சர்கள் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், எஸ்.ரகுபதி, முனைவர் கோவி. செழியன், சி.வி.கணேசன், சி.வ.வீ.மெய்யநாதன், எஸ்.எஸ்.சிவசங்கர், தமிழ்நாடு அரசின் டெல்லி பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், மாவட்டக் கழகச் செயலாளர்கள் பொறுப்பாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, தி.பழநிவேல், பூண்டி கே.கலைவாணன், காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ, க. வைரமணி, வீ.ஜெகதீசன், நிவேதா முருகன் எம்.எல்.ஏ, கே.கே.செல்லபாண்டியன், என்.கௌதமன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ச. முரசொலி, அருன் நேரு, கவிஞர் சல்மா தாட்கோ தலைவர் ந.இளையராஜா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மகளிர் மற்றும் மகளிர் தொண்டரணி மாவட்ட அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.



சைதை தொகுதியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் இருபாலார் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்ச்சி சைதாப்பேட்டை அரசு மாதிரிப் பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில், சைதை தொகுதிக்குட்பட்ட 2500 இருபாலார் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடைகளை வழங்கினார். மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பகுதி செயலாளர்கள் துரைராஜ், எம். கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், மின்னல் கந்தப்பன், களக்காடி எல்லப்பன், மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார், வட்ட செயலாளர்கள் ந.தமிழரசு, நாகா, எஸ்.பி.கோதண்டம், சை.மு.சேகர், அட்கோ கமலநாதன், க.மணி, நேருநகர் பாட்சா, ஆரோக்யராஜ், வரதன், முருகன், மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர் கிருஷ்ணகுமார் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.